99

இந்தத் தலைமுறை

'ஸார்!'

குரல் அடுத்தவீட்டு மாடியிலிருந்துதான் வந்தது, யார் குரல் என்று கூடத் தெரிந்துவிட்டது பாலுவுக்கு. அடுத்த வீட்டிலிருந்து தன்னைக் கூப்பிடுகிறவர்கள் யாருமில்லை என்ற பாவனையுடன் அவன் அசை யாமல் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான்.

அடுத்தடுத்த மொட்டை மாடிகள், நடுவே கைப்பிடிச் சுவர். பாலு கொஞ்சம் நாட்களாக ஏற்பட்ட வழக்கத்தின் படி, அடுத்த மாடிப்பக்கம் முதுகைக் காட்டிய வண்ணம் படுத்திருந்தான்.

'இந்தாங்கோ!'

குரல் கைப்பிடிச்சுவர் ஓரத்திலிருந்து கேட்டது. பாலு அசைய வில்லை.

'உங்களைத்தானே!'

அப்பொழுதுதான் பாலு தன்னை யாரோ கீழே கூப்பிடுவதாக பாவனை செய்து, நாற்காலியைவிட்டு எழுந்து கீழே இறங்கப் புறப்பட்டான்.

'இங்கே, அடுத்த மாடியில்!'

பாலு அந்தப்பக்கம் திடுகிட்டவன்போலத் திரும்பி, 'ஓ, நீங்களா கூப்பிட்டீர்கள்?' என்று சுவரோரம் போனான்.

'இந்தக் கடிதம் உங்களுடையது தானே? தபால்காரன் நம்பர் பிசகாக இருந்ததால் எங்கள் வீட்டில் போட்டுவிட்டு போனான்.'

'அப்படியா! நீங்கள் அதை அவனிடமே திருப்பிக் கொடுத்து விடலாமே!' என்றான் பாலு.

'கொடுத்து விடலாம், நாளைக்குத் தானே கிடைக்கும். என்ன அவசரமோ என்று கொடுத்தேன். வேண்டுமானால் அவனிடமே...'

'இல்லை, உங்களுக்கு இவ்வளவு சிரமமேற்பட்டு விட்டதே என்று சொன்னேன்.'

'சிரமம் என்ன இதில்?'

கிராம ஊழியன், 16.02.1944

'என்னைக் கூப்பிட்டு-அதுவும் இரண்டு மூன்று தரம்-நீங்கள்...'

'என் பெயர் சுலோசனா!' என்று அவள் குறும்புப் புன்னகையுடன் சொன்னாள்.

'ஓகோ, அப்படியா! நல்ல பெயர்தான்.'

'அது என்ன புத்தகம்? தலைகீழாக வாசிக்கிறாப்போலிருக்கிறதே!'

பாலு தூக்கி வாரிப்போட்டது போலக் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தான்; அதைத் தலைகீழாகத்தான் பிரித்து வைத்துக் கொண்டிருந்தான்.

'அதா... பெண் ஹிருதயம் என்ற புஸ்தகம். சில சமயங்களில் தலை கீழாகக் கூடப் படிக்கத்தான் வேண்டும்.'

'யார் எழுதினது?'

பாலு என்ன சொல்வது என்று யோசித்தான்.

'புருஷன் எழுதினதுதானே?' என்றாள் சுலோசனா.

'ஆமாம்!'

'அதானே கேட்டேன்!' படிப்பைக் கலைத்துவிட்டேன், மன்னிக்க வேண்டும்.'

'பாதகமில்லை, பாதகமில்லை!'

ஒரு மாதத்துக்கு முன்பு பாலுவின் வீட்டுக்கு அடுத்தவீட்டிற்குத் தாயாரும் பெண்ணுமாக யாரோ குடிவந்தார்கள். வந்த அன்று மாலை, பாலு மாடி வெட்ட வெளியில் ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டிருந்த பொழுது பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தி நவ நாகரிக உடையில் அடுத்த மாடியில் வந்து நின்றாள். முதலில் இவன் இருப்பதை அவள் கவனிக்கவே இல்லை. புது ஜாகையைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருந்தாள். சிறிது கழித்து, அடுத்த வீட்டுப் பக்கம் திரும் பினவள், அங்கே ஒரு வாலிபன் உட்கார்ந்து தன்னைப் பார்ப்பதைக் கண்டாள். உடனே புருவங்களை நெளித்து, முகத்தைத் திருப்பிக் கொண்டு, கதவைப் படாரென்று மூடிக்கொண்டு கீழே போய்விட்டாள்.

மறுநாள் மாலை சுலோசனா மாடிக்கு வந்தபொழுது அவள் பார்வை முதலில் அடுத்த மாடியில்தான் விழுந்தது என்று சொல்ல வேண்டுமா? பாலுவின் முதுகுதான் அவளுக்குத் தெரிந்தது. கையில் புத்தகத்துடன் படுத்துக் கொண்டிருந்தான் நாற்காலியில்.

முதல்நாள் பாலு தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தைக் கண்டதும் அதைப் பெண்மையின் தினுசில் கண்டித்துவிட்டுக் கீழே போனாள்; அன்று அவன் மறுபுறம் திருப்பிப் படுத்திருந்ததைக் கண்டதும், அதே பெண்மையின் மனதில் ஒரு கோபம் உண்டாயிற்று.

மாடி அதிர அங்குமிங்கும் நடந்தாள். ஏதோ ஒரு சாமானை எடுத்து தடாலென்று கீழே போட்டாள். கீழே இருந்த தாயார், 'என்னடி சத்தம்?' என்றாள். 'ஒன்றும் இல்லை, அம்மா!' என்று விட்டு நாற்காலியைப் பார்த்தாள்.

நாற்காலியிலிருந்த பாலு, கல் போல் அசையாமல் படுத்திருந்தான். ஆனால், அது அவனுக்கு அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. முதல் நாள் சற்று நேரம் பார்த்த அந்த முகத்திலிருந்த கவர்ச்சி மறுபடி நினைவுக்கு வந்து, திரும்பிப் பார் என்று தூண்டிற்று. 'அவள் தான் அப்படி முகத்தில் அடித்தாற்போலக் கதவைச் சாத்திக்கொண்டு போனாளே!' என்று சும்மா இருந்துவிட்டான். ஆனால், அவன் காதுகள் மட்டும் காரியமாக இருந்தன.

சுலோசனா இன்றும் மாடியில்தான் இருந்தாள் என்று தெரிந்தது. மெதுவாக ஏதோவொரு பாட்டைக் கொஞ்ச நேரம் முணுமுணுத்தாள்; பிறகு சத்தம் வரவில்லை. ஆனால் அவள் மௌனமாக கைப்பிடிச் சுவர் மேலேயே வந்து சாய்ந்து கொண்டிருந்தாள் என்பது அவன் புலனுக்கு எப்படியோ தெரிந்தது.

அவன் உடலில் ஒரு உணர்ச்சி திடீரென்று கிளம்பி 'எழுந்திரு' என்று அலறிற்று. 'பொறுத்தவர் பூமியாள்வர், பொறு' என்று மறுபடியும் உள்ளம் சொல்ல, அசையாமல் உட்கார்ந்திருந்தான். புத்தகம் கீழே நழுவி விழுந்து விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

சுலோசனா பத்து நிமிஷங்கள் மௌனமாக இருந்தாள். ஆயினும், பிறகு எரிச்சலுடன் ஏதோ முணுமுணுத்து விட்டுக் கீழே இறங்கிப் போனாள்.

சற்று நேரத்திற் கெல்லாம் அவள் தாயார் மாடிக்கு வந்தாள்.

'ஏண்டாப்பா, உங்காத்துலே நீ தனியாகவா இருக்கே?' என்று கேட்டாள் பாலுவை.

பாலு நாற்காலியிலிருந்து எழுந்து சற்று அருகே போய், 'இல்லையே, எங்கம்மாள் இருக்கிறாள். என் தமையன், தமையன் ஸம்ஸாரம், குழந்தை எல்லாரும் இருக்கிறார்கள். நான் பரீட்சைக்குப் படிக்கிறேன். ஆகையால் சந்தடியில்லாமல் தனியாக இங்கே...' என்று இழுத்தான்.

'சரிதான். எதில் படிக்கிறாய்?

'பி. ஏ. பரீட்சைக்குப் போகவேணும் மாமி.'

'நாங்கள் நேத்திக்கித்தான் வந்தோம் குடி. வீடு சௌரியமாக இருக்கு.'

'நீங்கள் எந்த ஊரு?'

'நாங்க கதிராமங்கலம்!' என்று சொல்லி வீட்டு மாடிப் படியைச் சுட்டிக்காட்டி, 'இவா அப்பா போயி ரெண்டு வருஷமாச்சு. அவர் இருக்கிற வரையிலேயே பட்டணத்திலே இருந்தோம்; இவளும் படிச்சுண்டிருந்தா. அவர் போனதும் கிராமத்துக்கு வந்துட்டோம். அங்கே போதே போகவில்லை. அதுக்கும் சௌரியமாயிருக்கும்னு இங்கே வந்தோம். புருஷா துணை கிடையாது.'

'கிராமத்திலே நிலபுலன்?...'

'வீடு வாசல் நிலம் எல்லாம் இருக்கு, வருஷத்துலே ஐநூறு கலம்

வரும். பொம்மனாட்டிக் குடித்தனம்...'

'என்ன பண்ணுகிறது?...' என்று மரியாதையாக இழுத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

'உங்கம்மா ஊர்லே?'

'இருக்கா கூப்பிடரேன்!' என்று பாலு தாயாரைக் கூப்பிட்டான். அவள் வந்தாள்.

'அடுத்தாத்துலே குடி வந்திருக்கா இந்த மாமி,' என்று பாலு அறிமுகப்படுத்தினான்.

அதற்குமேல் ஏறக்குறைய சம வயதுள்ள இரண்டு தாயார்களும் பரஸ்பரம் க்ஷேம லாபங்களை விவரமாகப் பேசிக் கொண்டார்கள்.

'இங்கு ஒரு பயமுமில்லை. நீங்க கவலையில்லாமல் மாடியிலே படுத்துக்கலாம். எங்க பாலு ராத்திரி ஒருமணிவரையிலும் விளக்கைப் போட்டுண்டு படிச்சுண்டு இருப்பான். கீழேதான் நாங்கள்ளாம் இருக்கோம்!' என்று பாலுவின் தாயார் சொன்னதுடன் ஒருவாறாக பரிச்சயம் முடிந்தது.

பிறகு, தாயாருக்கும் பெண்ணுக்கும் பாலுவின் முதுகுக்கு பின்னால் சம்பாஷணை நடந்தது.

'பட்டணத்தைப் போலே இந்த ஊர்லே, புருஷர்களுக்கு பெண் களோடே மரியாதையாகப் பழகத்தெரியாது போலேருக்கு!' என்று சுலோசனா குரல்.

'கும்மோணமும்கூட பட்டணம் மாதிரிதான். இந்த நாஸுக்கு பட்டணத்துலே கூட இருக்காதே!' தாயாரின் விமரிசனம்.

மறுநாள் மாலை பாலு புத்தகத்தைச் சரியாகப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான்.

'பெண் ஹிருதயமா?' என்று கைப்பிடிச் சுவருக்கு அப்புறமிருந்து குரல் வந்தது.

'ஆமாம்!' என்று பாலு எழுந்து நின்றான்.

'நீங்கள் உட்காருங்கள்!'

'மரியாதை தெரியாமல்...'

சுலோசனா சிரித்துக் கொண்டே 'நன்றாயிருக்கிறது. தெரிந்துதானே முதுகு பக்கத்தை...' என்று இழுத்தாள்.

பாலுவுக்கு அசடு தட்டியது. என்ன சொல்லலாம் என்று சற்று ஆலோசிக்க வேண்டியதாகிவிட்டது.

'வாருங்களேன், இந்தப் பக்கம்! எங்கள் வீட்டைப் பார்க்கலாமே!'

பாலு கைப்பிடிச் சுவரைப் பார்த்தான்.

'சுவர் இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? இதைத் தாண்ட முடியாதா உங்களால்?'

'தாண்ட முடியாமல் என்ன...'

'பின்...?'

'ஒன்றுமில்லை...'

'நான் வேண்டுமானால் ஒருகை கொடுக்கிறேன். ஒரு காலை சுவர்மேல் வைத்து ஏறி, இந்தப் பக்கம் குதித்து விடலாம்!'

பாலு பிறகு யோசிக்கவில்லை. நீட்டின கையைப் பிடித்த வண்ணம் சுவரைத் தாண்டினான். சுலோசனா புத்தகத்தை வாங்கிப் பார்த்தாள்: ஷேக்ஸ்பியர்!

'பெண் ஹிருதயமா – இது?'

'இதல்ல. நான் மூன்று நாட்கள் வாசித்த புத்தகம்...'

●